ஆலந்தூர் தொகுதியில் உள்ள பொது மக்கள் கோரிக்கையை ஏற்று 3 புதிய வழித்தடத்தில் பேருந்துகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

-"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம் – தமிழ்நாடு முழுவதும் 1,256 முகாம்கள்!

18,52,561 பேர் பயன்பெற்று வெற்றிகரமாக நிறைவு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, மார்ச் 1

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 28.02.2026 அன்று சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்ககத்தில், முதலமைச்சர் அவர்களால் 02.08.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்ட "நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்" 1,256 முகாம்கள் நிறைவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு பல்வேறு மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் மிகச் சிறப்பாக செயல்படுத்தி, இந்திய அளவில் மட்டுமல்ல உலகளவில் பாராட்டுக்களை பெற்று வருகிறது. அந்தவகையில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48, இதயம் காப்போம், வருமுன் பாதுகாப்போம், பாதம் பாதுகாப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம், செயற்கை கருத்தரித்தல் மையங்கள் என்று பல்வேறு திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்பாட்டில் இருந்து வருகிறது.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் 2,58,80,625 பேர் பயன் பெற்று இருக்கிறார்கள். இந்த மகத்தான திட்டத்திற்காக தமிழ்நாட்டிற்கு ஐ.நா விருதும் வழங்கப்பட்டுள்ளது. அதாவது United Nation interagency Task Force Award என்கின்ற விருது இந்த திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48

முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் மிகச் சீரிய திட்டங்களில் முதன்மையானதாக கருதப்படுவது இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 எனும் திட்டம் ஆகும். இந்த திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் யாருக்கு விபத்து ஏற்பட்டாலும் அவர்களை உடனடியாக காப்பாற்றி முதல் 48 மணி நேரத்தில் ரூ.2 இலட்சம் நிதியுதவியுடன் அவர்களின் உயிர்களை காப்பாற்றும் மகத்தான திட்டம் ஆகும்.

முதலமைச்சர் அவர்களால் 18.12.2021 அன்று தொடங்கப்பட்ட இந்த திட்டம் இன்று வரை 5,22,908 பேருடைய உயிர்களை காப்பாற்றி இருக்கிறது. இதற்காக அரசு செலவிட்டத் தொகை ரூ.505.54 கோடி ஆகும்.

இப்படி பல்வேறு திட்டங்கள் மிகச்சிறப்பாக செயல்படுத்தி வரும் நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 02.08.2025 அன்று சென்னையில் நலம் காக்கும் ஸ்டாலின் எனும் மகத்தான திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இந்த திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஒன்றியங்களிலும் வட்டாரத்திற்கு 3 என்கின்ற வகையிலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 என்கின்ற வகையிலும், 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநராட்சிகளில் தலா 4 என்கின்ற வகையிலும், 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 என்கின்ற வகையிலும் 1,256 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த திட்டம் தொடங்கப்பட்டதற்கு பிறகு, முதலமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தின் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணித்து வந்ததன் அடிப்படையில் நேற்று இரவு (27.02.2026) 07.00 மணிக்கு 1,256 முகாம்கள் வெற்றிகரமாக முடிவுற்று மக்கள் பேராதரவு பெற்றுள்ளது.

18.50 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன்

இந்த திட்டத்தைப் பொறுத்தவரை பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியியல் மருத்துவம் மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மனநல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், சித்தா மற்றும் இந்திய முறை மருத்துவம் என்று 17 வகையான சிறப்பு மருத்துவ சேவைகள் இதன் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மிகப் பெரிய அளவில் முழு உடற்பரிசோதனை என்கின்ற வகையில் இந்த திட்டத்தின் மூலம் நேற்று வரை நடைபெற்று முடிந்திருக்கின்ற 1256 முகாம்களில் பயன்பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை 18,52,561. முதலமைச்சர் அவர்கள் சிந்தனையில் உதித்த சீர்மிகு திட்டங்களில் ஒன்றாக கருதப்படும் இத்திட்டம் மிகப் பெரிய வெற்றியை அடைந்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்ட 1,256 முகாம்களில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு அட்டை புதிதாக பெற்றவர்களின் எண்ணிக்கை 50,190 பேர். மேலும் மாற்றுத்திறனாளிகள் சான்றிதழ்கள் 60,682 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொழிலாளர் நலத்துறை சார்பில் பயன் பெற்ற பயனாளிகள் எண்ணிக்கை 3,55,584, அமைப்புச் சாரா தொழிலாளர்கள் 2,78,739, தூய்மை பணியாளர்கள் 96,352 பேரும் பயன் பெற்றிருக்கிறார்கள்.

இந்த முகாம்கள் மூலம் புதிதாக நோய் பாதிப்புகள் உள்ளானவர்களை கண்டறிந்து மேல்சிகிச்சைக்கு பரிந்துரைத்து அவர்களுக்கு தொடர் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. புற்று நோய் பாதிப்புகள் உள்ளானவர்கள் என்று கண்டறியப்பட்டவர்கள் 222 பேர். கண்புரை நோய் கண்டறியப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்கள் 8,401 பேர். காசநோய் பாதிப்புகள் கண்டறியப்பட்டவர்கள் 595 பேர், இருதய நோய் பாதிப்பு கண்டறியப்பட்டவர்கள் 1,626 பேர், நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு கண்டறியப்பட்டவர்கள் 3,877 பேர், புதிதாக சர்க்கரை நோய் பாதிப்புகள் கண்டறியப்பட்டவர்கள் 1,50,708 பேர், உயர் இரத்த அழுத்தம் 4,28,454 பேர், சிறுநீரக மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டவர்கள் 46,409 பேர், இரத்த சோகை கண்டறியப்பட்டவர்கள் 66,251 பேர் என 7,06,543 பேர் மேல் சிகிச்சைகளுக்காக பரிந்துரைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனவே இந்த திட்டம் வெற்றி பெற மிகவும் முக்கிய காரணமாக அமைந்த துறையின் உயரலுவலர்கள் அனைவருக்கும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், கூடுதல் இயக்கநர் மரு.சம்பத் மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ரூ.249 கோடி மதிப்பில் கட்டப்பட்ட நிதிநுட்ப கோபுர கட்டிடம் திறப்பு விழா!

நந்தம்பாக்கத்திற்கு வருகை தரும் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

ஆலந்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை,மார்ச்.2-

ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

ரூ.249 கோடி மதிப்பில் கட்டப்பட்ட நிதிநுட்ப கோபுர கட்டிடத்தை திறந்து வைக்க இன்று மார்ச் 2ஆம் தேதி காலை நந்தம்பாக்கத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து, கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் அன்று காலை 9.30 மணியளவில் மாபெரும் வரவேற்பு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், மற்றும் கழகத் தோழர்கள் கட்டாயம் இருவர்ண கழக கொடியுடன் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட கழக அருகில் கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம். எஸ்.கே.ரமேஷ் ராஜ் வழங்கினார். அருகில் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் கழக அணிகளின் அமைப்பாளர்கள் நிர்வாகிகள் உள்ளாட்சி இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (1-03-2026) சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் "March -1 - March Along with saidai people " எனும் தலைப்பில் 5 கி.மீ. மாபெரும் வாக்கத்தான் போட்டி இருபதாயிரம் பேர் பங்கேற்புடன் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகராஜா, மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் , பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இராதுரை ராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன் உள்ளிட்ட ஏராளமான திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

வட்டக் கழகச் செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையில்

மதுரவாயல் 92வது வட்டத்தில் முதல்வர் பிறந்தநாள்: கழகக் கொடியேற்றி காலைச் சிற்றுண்டி!

பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் வழங்கினார்!

சென்னை, மார்ச்.2-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி ஆகியோர் வழிகாட்டலில் வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையில் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முகப்பேர் 20/ஏ பஸ் நிலையம் அருகே உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கியும் பகுதி பிரதிநிதி கை.பிரகாஷ் ஏற்பாட்டில் காலை சிற்றுண்டி வழங்கியும் சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர் கே.நீலகண்டன், பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ், மாவட்ட பிரதிநிதி எம்.சி. எழில்அரசு முன்னிலையில், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.ஜி.வேலன், டாக்டர் எம்.சி.அழகிரி, ஏ.சுந்திரி, எம்.எஸ்.பிரபா, பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், டி.கலைநேசன் எம்.பி.நவராஜ், எம்.என்.ராஜ்கமல், எம்.ஏ.மதியழகன், எம். ஜேம்ஸ், எம்.இ.எஸ்.தமிழன்பன், எம்.சி.இளங்கோவன், எஸ்.ஆனந்தன், எம்.பி.சீனிவாசன், எம்.எஸ். தமிழ் அழகன், பி.நவகுமார், எஸ்.ஜமுனா, ஜெ.தாமோதரன், எம்.கண்ணப்பன், எம்.எம்.இமயவர்மன், சி.காமராஜ், டி.ஆல்பர்ட், டி.நிக்ஸன், வி. வளர்மதி, எம்.டிராஜி, வி.கலைவாணன், கே.மேகநாதன், டி.அமுல்ராஜ், கே.தயாநிதி, வி.திருமுருகன், என்.தினேஷ், எஸ். ராகுல், எம்.கே.நரேஷ், எம். எஸ்.கார்த்திக், யு.காயத்திரி, எஸ்.சுரேஷ், எம்.எஸ்.சந்தானம், எஸ்.பாலாஜி, எம். ஜி.சுரேஷ், எ.லீலவாதி எழிலரசு, டி.புகழேந்தி, எம். எஸ்.ஜெயசிம்மன், பி.நாகராஜ், கே.முருகன், எம்.பி. நவசுந்தர், ஜி.நாகராஜ், எம். சி.விமல்தாஸ், வி.ஆர். மகேந்திரன், எம்.ஜி.எம்.புகழேந்தி, எல். கிருஷ்ணமூர்த்தி, கே.பிரகாஷ், எம்.சபரிதாஸ், என். மல்லியப்பன், எம். ஜி.தேவன், அ.வாள்மூர்த்தி, எம்.எஸ்.லஷ்மணன், எம். பி.எழிலரசு, அ.பிரதாப், எஸ்.விஜயகுமார், எம்.எம். வினோத் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் எம்.ஜி. விக்னேஷ், எம் எம் ஜெ. ரோஷன்காந்த் எம் . சக்திவேல் எம்.எஸ்.மனிரூபன் ஜெபஸ்டின், ஆகாஷ், எஸ் . நரேந்திரன் வி. தத்தாத்ரேயா, எஸ் . சபரி கே.சுரேஷ்குமார், சி.கரிகாலன், ஜெய்சங்கர், எஸ்.சந்திரபாபு, ஜி.கர்ணன், ஜி.நாகராஜன், எம்.நவீன்குமார், பி.பிரசாத், ஜி.செல்வகுமார், டி.என்.முரளி ரமணா, மகளிர் அணி சேர்ந்த சிவசக்தி பிரியா, வி.அறிவுக்கரசி, எஸ்.அர்ச்சனா, கே.பூரணி, கழக நிர்வாகிகள் மற்றும் நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டார்கள்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவொற்றியூரில் ரூ. 4.62 கோடி மதிப்பீட்டில் படகுக் குழாம்!

மேயர் பிரியா திறந்து வைத்து படகுச் சவாரி மேற்கொண்டார்!

சென்னை,மார்ச்.2-

நேற்று (01.03.2026) மேயர் திருமதி ஆர்.பிரியா, திருவொற்றியூர் மண்டலம், வார்டு-3, அன்னை சிவகாமி நகரில் ரூபாய் 4.62 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட திருவொற்றியூர் படகுக் குழாமினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

பின்னர் மேயர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் மணலி மற்றும் மாதவரம் ஏரிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அமைக்கப்பட்ட படகுக் குழாம் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனை ஏராளமான பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதைப் போல தற்போது திருவெற்றியூர் மண்டலத்திலும், புதிய படகுக் குழாம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை இப்பகுதியில் வசிக்கும் மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்கள்.

திருவொற்றியூர் அன்னை சிவகாமி நகரில் 20.17 ஏக்கர் பரப்பளவில் புதிதாக அமைக்கப்பட்ட ஏரியில் ரூபாய் 4.62 கோடி மதிப்பீட்டில் படகுக் குழாம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அழகிய நுழைவாயில்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான நுழைவாயில், காத்திருப்பு அறை, உணவகங்கள், டிக்கெட் வழங்கும் பகுதி, ஆண், பெண் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறைகள், முதலுதவி அறை, மீட்பு நடவடிக்கை வசதிகள், குடிநீர் வசதிகள், படகு சவாரிக்கான பல்வகை படகுகள், மின்விளக்கு வசதிகள், கம்பி அமைப்புடன் கூடிய சுற்றுச்சுவர், உள்ளிட்ட வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த படகு குழாமில் 8 இருக்கை விசைப் படகு, 4 இருக்கை மிதிப்படகு, 2 இருக்கை மிதிப்படகு, 1 வாட்டர் ஸ்கூட்டர், 1 இருக்கை கயாக், 2 இருக்கை கயாக், 3 அக்வா ஜோர்பிங், 2 அக்வா ரோலர் ஆகிய வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் தி.மு. தனியரசு, மண்டல அலுவலர்

தி.பத்மநாபன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் ஆர். லட்சுமி பிரியா, தலைமை மேலாளர் வெங்கடேஷ், மாமன்ற உறுப்பினர் போ.தமிழரசன் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூர் மண்டலம், வார்டு-3, அன்னை சிவகாமி நகரில் ரூபாய் 4.62 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட திருவொற்றியூர் படகுக் குழாமினை நேற்று (01.03.2026) மேயர் திருமதி ஆர்.பிரியா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் தி.மு. தனியரசு, மண்டல அலுவலர் தி.பத்மநாபன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் ஆர்.லட்சுமி பிரியா, தலைமை மேலாளர் வெங்கடேஷ், மாமன்ற உறுப்பினர் போ.தமிழரசன் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.